17.03.2025 **OS.No.187/2014**
பி.வா.சா. **2** பெயர்: கிருஷ்ணமூர்த்தி த/பெ. சின்னாக்கவுண்டர்
சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.
குறுக்கு விசாரணை தொடர்ச்சி

7.எனது மாமனார் பெயர் K.P. முருகேசன் என்றால் சரிதான். எனது மாமனார் அவரது மாமனார் முருகன் என்பவரிடம் இருந்து 25 செண்ட் இடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படிகிரைய பத்திரம் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் 2-வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது எதிர் வழக்குரையில் எனது மாமியார் சீதனமாக 3.52 செண்ட் இடத்தை பெற்றது போன்று மற்ற சகோதரிகளும் சுமார் தலா 4 ஏக்கர் இடத்தை பெற்றுள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1968ல் எனது மாமியார் சீதனமாக 3.52 செண்ட் பெற்றுள்ளாரா என்றால் 1973ல் தான் சீதனமாக மேற்படி சொத்து கொடுக்கப்பட்டுள்ளது. நான் எனது வாக்குமூலத்தில் 1968 ல் எனது மாமியார் சீதனமாக 3.52 செண்ட் பெற்றுள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது எதிர் வழக்குரையில் 3-ம் பத்தியில் 1968ல் 14ம் இன சொத்தை சீதனமாக எனது மாமியார் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் வாதிகளும் அவரது தந்தையிடம் இருந்து சில சொத்துக்களை தலா 4 ஏக்கர் இடத்தை கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் முருககவுண்டருக்கு பரம்பரையாக பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது எதிர் வழக்குரையில் 2-ம் வாதி கிரையம் பெற்ற சொத்துக்கள் முருககவுண்டருக்கு பாகமாக கிடைத்த சொத்து என்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

8. சர்வே எண். 77/2A சொத்தானது முருககவுண்டருக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் மேற்படி சொத்தில் பாகம் வேண்டும் என்று வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆரம்பத்தில் வழக்கு தாக்கல் செய்தபோது சர்வே எண். 77/2A சொத்தானது வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு மேற்படி வழக்கு சொத்து ஏன் சேர்க்கப்பட்டது என்று தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் இவ்வழக்கு சொத்தினை வாதத்தின்போது சேர்க்கவில்லை என்று சொன்னதால் பின்னர் சேர்க்கப்பட்டதாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். யார் மேற்படி சொத்தை வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் வாதிகள் கோரியதன்படியாக சேர்க்கப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணையில் 9-ம் பத்தியில் இருதரப்பு விசாரணைக்கு பின்னர் வாதம் கேட்கப்பட்டு தீர்ப்புக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், 3-ம் பிரதிவாதி அளித்த சாட்சியத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கு சொத்து சேர்க்கப்பட்டுள்ளதாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதி சொன்னதன் பேரில் வாதிகள் மனுதாக்கல் செய்து மேற்படி சொத்து வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது தான் சரியானது. வாதிகள் மற்றும் நான் ஒன்றாக தான் பேசிக்கொண்டு இருந்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல.

9. 3-ம் பிரதிவாதி வழக்கு சொத்து பற்றி சொன்னது எனக்கு எப்படி தெரியும் என்றால் சொத்தினை சேர்த்து நான் தரப்பினராக சேர்ந்த பின்னர் தான் அது பற்றி எனக்கு தெரியும். வழக்குரையை வாதி திருத்தம் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை 10-ஆம் பத்தியில் வாதிகள் சொத்து விவரம் சேர்த்தது பற்றி திருத்தல்

செய்யப்படவில்லை என்றும், அது குறித்து இரு தரப்பிலும் எவ்வித ஆட்சேபணை செய்யவில்லை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.பி.சா.ஆ.19 மற்றும் 20 கிரைய சொத்துகளை நாங்கள் அனுபவிக்கிறோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்துக்களின் வாதிகள் பாக உரிமை கோரியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்து சம்பந்தமாக வாதிகள் சாட்சியம் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்குரை திருத்தல் செய்த பின்னர் வாதிகள் மேற்படி சொத்து சம்பந்தமாக சாட்சியம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது முதல் விசாரணை 10-ஆம் பத்தியில் வாதிகள் பி.சா.ஆ.19 மற்றும் 20 கிரைய சொத்துகளில் நாங்கள் இருப்பதாக ஒப்புக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளிடம் மேற்படி சொத்துகள் எங்கள் அனுபவத்தில் இருப்பதை ஒப்புக்கொண்டுவிட்டு ஏன் பாகம் கேட்பதாக கேட்டுள்ளேனா என்றால் அது பற்றி கேட்கவில்லை.

10. மேற்படி எங்களது கிரைய ஆவணத்தை இரத்து செய்ய வாதிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 2002ம் வருடத்தில் முருககவுண்டரின் வாரிசுகள் அனைவரும் சொத்தில் பங்கு வேண்டும் என்று 1 மற்றும் 3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் மணிமேகலை தவிர மற்ற வாரிசுகள் அறிவிப்பு கொடுத்தார்கள். அது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது மாமியார் சொல்லி அது பற்றி எனக்கு தெரியும். வா.சா.ஆ.3 படியாக அறிவிப்பு வழக்கறிஞர் A . லட்சுமிநாராயணன் என்பவர் பாகம் கோரி அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் 7 சகோதரிகள் அறிவிப்பு அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான். அதில் எனது மாமியார் மணிமேகலை பெயர் உள்ளது என்றால் சரிதான். அதில் 77/2A சொத்தானது 10ம் இன சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு அனுப்பிய பின்னர் தான் எனக்கு திருமணமானது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 05.02.2003ல் திருமணமாகிவிட்டது. இவ்வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 2014ம் வருடத்தில் தான் வழக்கு பற்றி தெரியும். எனது தூண்டுதலின் பேரில் 2-ம் பிரதிவாதி மற்றும் 4-ம் வாதி சேர்ந்து 77/2A சொத்தினை எனக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையமாக தான் சொத்தினை கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற சொத்திற்காக மூலப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் என்னிடம் உள்ளது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் 1973-ம் வருடத்தில் எனது மாமியார் பெற்ற சீதன சொத்தினை நான் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

11. பி.சா.ஆ. 21 வருவாய்துறை பட்டா எப்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் 11.05.2022ல் தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நான் 2003 மற்றும் 2011ல் சொத்துகளை கிரையம் பெற்றுள்ள நிலையில் ஏன் 2022ல் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் பட்டா மாற்றி கொள்ளலாம் என்று நான் தான் நிருத்தி வைத்திருந்தேன். எனது முதல் விசாரணையில் பத்தி 12ல் எனது கிரைய ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ,3 ஆண்டுகளுக்குள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதனால் வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகயும் வாதிகள் வழக்கை நடத்த உரிமை இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளுக்கு பொட்டியம்மாள் என்ற அத்தை உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொட்டியம்மாள்

என்பவர் முருககவுண்டரின் தங்கை என்றும் அவருக்கு தாவா சொத்தில் பாகம் வேண்டும் என்று முருககவுண்டர் வாரிசுகளுக்கு எதிராக கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தில் அ.வ. எண். 63/2004 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் மணிமேகலை மற்றும் வாதிகள் வழக்கறிஞர் வைத்து வழக்கினை நடத்தி வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு முடிவடையாத நிலையில் முருககவுண்டருக்கு தாவா சொத்து முழு பாத்தியம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே முருககவுண்டரிடம் இருந்து எனது மாமியார் சொத்துக்களை சீதனம் பெற்றதாகவும், வாதிகள் தலா 4 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளதும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.77/2A சொத்தினை பொறுத்து சிவக்குமார் போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.91/2005 வழக்கினை நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. எப்போது மேற்படி வழக்கு தள்ளுபடியானது என்றால் 2019 வருடத்தில் தள்ளுபடியாகிவிட்டது. மேற்படி வழக்கு விசாரணை நடைபெற்று தள்ளுபடியானதா அல்லது வாதி ஆஜரின்மையால் தள்ளுபடியானதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நானும் எனது மாமியாரும் பிரதிவாதிகள் என்றால் சரிதான். இவ்வழக்கில் சொத்தினை எப்போது சேர்த்து திருத்தம் செய்தார்கள் என்றால் 2014 வருடத்தில் திருத்தம் செய்தார்கள். இவ்வழ்க்கில் போச்சம்பள்ளி வழக்கு சொத்து சேர்த்த பின்னர் தான் மேற்படி அ.வ. எண்.91/2005 வழக்கு தள்ளுபடியானது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி ஆஜரின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் தற்போது மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கினை இவ்வழக்குடன் சேர்த்து நடத்த வேண்டுமென்று Transfer OP மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி Transfer OP மனுவில் நான் ஆட்சேபணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. சர்வே எண் 77/2A சொத்தினை சிவக்குமார் இளவராக இருந்தபோதே அவரது தந்தை சிவக்குமார் பெயரினை அ பதிவேட்டில் பதிவு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றும், வழக்கு சொத்தினை அபகரிக்கும் நோக்கில் விவரங்கள் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் பழனியம்மாளும் சேர்ந்து 1,3 பிரதிவாதிகள் தென்னந்தோப்பில் தேங்காய் பறிக்க சென்றபோது அவர்களை அடித்து காயப்படுத்தி உள்ளோம் என்றும் அது சம்பந்தமாக சத்தியா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எங்களை சிவக்குமார் , சத்தியா அடித்து அவர்கள் மீதுதான் நாங்கள் புகார் கொடுத்துள்ளோம் மேற்படி வழக்குகள் நிலுவையில் உள்ளபோது எனது செல்வாக்கை பயன்படுத்தி 2022 வருடத்தில் பட்டாமாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி பாத்தியமில்லாத சொத்தை கிரையம் கொடுத்ததாக ஆவணங்களை ஏற்படுத்தி தாவா சொத்தினை அபகரிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பழனியம்மாள் வழக்கு சொத்து பொறுத்து சாட்சியமளிக்காமல் நான் பிரதிவாதி தரப்பு சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மணிமேகலையின் தரப்பில் 3-ம் பிரதிவாதியை ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் மணிமேகலைக்கும் ஒரே வழக்கறிஞர் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த

மணிமேகலைக்கு சொத்து சீதனமாக கிடைத்தது என்பதற்கு மணிமேகலையே சாட்சியாக விசாரணை செய்ய உள்ளேனா என்றால் இல்லை. மணிமேகலை மற்றும் சத்தியா, சிவக்குமார் ஆகியோர்கள் சொத்து பிரச்சனை காரணமாக தனியாக தான் உள்ளார்கள் என்றால் சரிதான். மணிமேகலைக்கு சீதன சொத்து தவிர வேறு சொத்துக்களை பொறுத்து உரிமை கோருகிறாரா என்றால் இல்லை என்று விலகி விட்டார். மணிமேகலை இவ்வழக்கில் சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை சாட்சியாக விசாரிக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

2,3 பிரதிவாதிகள் மற்றும் வாதி தரப்பு குறுக்கு விசாரணை - வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.